மாதர் மனோரஞ்சனி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol-XIII.	Madras: November 1911.	No-11.
புத்தகம் - கங.	சென்னப்பட்டணம்: நவம்பர்மீ 1911.	இலக்கம்-11.

நமது அரசசக்ரவர்த்தியின் சரித்திரம்.

282-வது பக்கத்தொடர்ச்சி.

ஜெர்மன் சக்ரவர்த்தி விலையுயர்ந்த மேன்மூடியுள்ள கெண்டியை அனுப்பினராம். இதுபொன்னாலும், வெள்ளியினாலும் செய்யப்பட்டும் மேன்மூடி ராஜாங்கத்திற்குரிய கிரீடம் போலுமிருந்தது. அழகான தலைக்குல்லாயொன்றை ஸரேதேசத்து ஜனங்கள் அனுப்பினார்களாம். இது வைடூரியத்தால் இழைக்கப்பட்டிருக்கிறதாம்; மேரி ராணியாருக்கு இதை அணிந்து கொள்வதில் மிகப் பிரியமாம்.

ஜூலைமாதம் 6வ ஜனங்களெல்லாம் வெகு குதூகலமாயிருந்த நாளென்றேசொல்லலாம்; அன்று மழையுமில்லை, இளம்வெயிலிருந்ததாம். வெடியிற்காலையிலிருந்து மத்தியானம் 12-மணிவரையிலும் லண்டன்மாநகருக்கு ஜனங்கள் கும்பல்கும்பலாக ஊர்கோலத்தை ஆவலுடன் பார்க்கவந்து கொண்டிருந்தார்கள். வழிகளில் ஆயிரக்கணக்கான கும்புகளிருந்தன. $10\frac{1}{2}$-மணியானதும் செண்ட் ஜேம்ஸ் அரமனையிலுள்ள அம்பாசடர்ஸ் கோர்ட்டில் நுழைய ஜனங்கள் ஆரம்பித்தார்கள்.

முதலில் 7-வது எட்வர்டுக்குச்சிநேகிதரும் இராஜ தர்மநிபுணருமான மிஸ்டர் க்ளாஸ்டன் வந்தார். இவர் நமது காலஞ்சென்ற 7-வது எட்வர்டுக்கு நெருங்கிய சிநேகிதர்களில் ஒருவர். மாதர்கள் தரித்திருந்த உடுப்பும் அணிந்திருந்த நகைகளும், அம்மண்டபத்தின் அழகை எடுத்துக்காட்டிற்று. முதல் ஊர்கோலம் புறப்பாடு ஆனது என்பதைதெரிவிக்க வெளியிலுள்ள பாண்டுவாத்தியம் முழங்கிற்று.

கோயிலில் பிரபுக்களும் சீமாட்டிகளும் தாமிரவர்ணமுள்ள ஆடையாலலங்கரித்த ஸ்தானங்களில் வீற்றிருந்தார்கள். உடனே மணமகனாகிய ஜார்ஜ் அரசர் இச்சிறுகோயிலுள் தமது தகப்பனார், சிற்றப்பன், முதலியவர்களுடன் பிரவேசித்தார். தளகர்த்தன் அணியும் உடுப்பை ஜார்ஜ் அணிந்திருந்தார். கூச்சமுள்ளவராகத் தென்பட்டாராம்.

இவர் இங்கு தமது மனைவியாகப்போகும் மேரிக்காக அதிகநேரம் காத்திருக்கவில்லை. உடனே மேரி ரோஜா, நெருஞ்சில் முதலியவைகளைப் போல் பூப்போட்ட உடுப்புகளை யணிந்துகொண்டு தமது உறவினர்களுடன் யாவரும் சந்தோஷப்படும்படி வந்துசேர்ந்தாள்.

கலியாணப்பெண்ணுக்குத்தோழிகளிருப்பது வழக்கமல்லவா? அவ்விதமே அவர்களிலும் உண்டு. நமது மேரி ராணியார் மணக்கோலம் கொண்டபொழுது அவர்களுக்குத் தோழிகளாகப் பிரின்ஸஸ் விக்டோரியாவும், மாட் ஆப்வேல்ஸுமிருந்தார்கள். இவர்களும் இன்னும் சிலமாதாரசிகளும் ராணியாருடன் ஆலயத்திற்குள் சிறிது தூரம்வரையில் வந்தார்கள். டேக் பிரபு தமது புத்திரியின் விவாக மகோற்சவத்தைக் கண்டுகளிக்க வெகு ஆவலாயிருந்தார். இவரும் இவரது குமாரனும் மேரியுடன் பலிபீடத்திற்குப்போனார்கள். டெக்பிரபுவின் மனைவியார் தம்பதிகளுக்கு அருகில் கண்ணில் ஆனந்த பாஷ்யம் பொங்க உட்கார்ந்து கொண்டிருந்தார்கள்.

இவ்விவாகத்திற்காக அநேக மன்னர்கள் அழைக்கப்பட்டார்கள். அவர்களில் ருஷியா சக்ரவர்த்தினி, டென்மார்க் அரசரும், அரசியுமே. இவர்கள் நமது ஜார்ஜ் பாலியப்பருவமுதற்கொண்டு ஜார்ஜின்மீது மிகவாஞ்சையுள்ளவர்களாயிருந்தார்கள். மணமகன் பலிபீடத்திற்கு எதிரில் வருவதற்கு முன் நமது விக்டோரியா மகாராணியார்வந்தார்கள்.

அங்குள்ள மன்னர்கள் பிரபுக்கள் குருமார்கள் எல்லாம் முகமலர்ச்சியுடன் எழுந்து நின்றார்கள். வாத்தியகோஷம் மகாராணியார் வரவைத்தெரிவிக்கமுழங்கிற்று. வெள்ளிசரிகையால் பூவுள்ள கறுப்புபட்டாடையைத் தரித்துக்கொண்டும், வைரமிழைத்துள்ள சிறிய கிரீடத்தை சிரசில் வகித்துக்கொண்டும், ராஜதண்டம் முதலிய அடையாளங்களுடன் இவ்வுலகத்திலுள்ள சக்ரவர்த்திகளைவிட மிக்க ஐசுவரியம், பெருமை கீர்த்திபெற்றுவிளங்கிய சக்ரவர்த்தினி தமது அருமையான பேரனுடைய விவாகமகோற்சவத்தைக் கண்டுகளித்து பேரனையும் பேரனது மனைவியையும் ஆசிர்வதிக்கவும் அத்திவ்ய ஸ்தலத்திற்கு வந்தார்கள்.

கலியாணமண்டபம் இப்பொழுது தான் நிறைந்திருந்ததென்று சொல்லலாம். இக்காட்சி வெகு அழகாகயிருந்ததாம். அங்குள்ளவர்கள் கண்குளிர இக்காட்சியைப்பார்த்து ஆநந்த சாகரத்தில் மூழ்கினார்களாம்.

குருமார்கள் விவாகச்சடங்கை நடத்தவந்திருந்தார்கள். அவர்களில் கேன்டர்பரி ஆர்ச்பிஷப், (அத்தியக்ஷகர்) லண்டன் பிஷப், ரோசஸ்டர் பிஷப், கனம் ரெவரெண்டு ஈகார்கிளேன் என்பவர்களே.

காண்டர்பரி அத்தியக்ஷகர் கிரமப்படி விவாகச்சடங்குகளை நடத்தினர். கூடிய சீக்கிரத்திலேயே சடங்குகள் முடிந்தன.

மணமகளை மணமகன் கையில் ஒப்புவித்து மணமகளின் தகப்பனார் மெதுவான தொனியில் அவளை அங்கீகரிக்கும்படி சொன்னார்.

ஆர்ச் பிஷப் சுருக்கமாக சூழ்ச்சியுடனும் அடக்கத்துடனும், நடத்தை, எண்ணம், பேச்சு இவைகளில் அறிவும் தேவையென்பதைப்பற்றி ஊன்றிப் பேசி, உலகத்தாருக்கு இவ்விவாகம் நன்மையை விளைவிக்குமென்றும் தமது எண்ணத்தைத்தெரிவித்தார்.

ஒருகீதம் பாடியபின், யார்க் பிரபு தமது மனைவி, விக்டோரியா ராணியார், இளவரசியாயிருந்த தமது தாயார், தமதுமாமியார், டென்மார்க்அரசி, அரசர் முதலியவர்களுடைய கரத்தைப்பிடித்து முத்தமிட்டார். இவர்கள் மிகுந்த ஆநந்தத்துடன் அதை அங்கீகரித்தார்கள்.

மணமகளையும் மணமகனையும் விக்டோரியா மகாராணியாரும் இன்னும் மற்ற மன்னர் முதலியவர்களும் வாழ்த்தினார்கள். சீதனங்களும், வெகுமதிகளும் அளிக்கப்பட்டவுடன் பக்கிங்ஹாம் அரமனைக்கு விவாகசிற்றுண்டி புசிக்க பவனிசென்றார்கள். இச்சமயத்தில் பீரங்கிவெடிகள் தீர்ந்தன. லண்டனிலுள்ள கோயில் மணிகளின் சப்தம் முழங்கிற்று.

பக்கிங்ஹாம் அரமனைக்கெதிரில் வதூவரர்களிருவரும் திரும்பிவருவதைக்காண ஜனங்கள் கூட்டம் கூட்டமாய் ஆவலுடன் நின்றுகொண்டிருந்தார்கள். ஜார்ஜ் அரச சக்ரவர்த்தியும் மேரி ராணியும் விக்டோரியா மகாராணியார் முதலியவர்களுடன் சாளரசார்ப்பில் உட்கார்ந்து சுமார் 10-நிமிஷகாலம் பேசிக்கொண்டிருந்தார்கள். எவரும் எதிர்பாராத இவ்வற்புத காட்சியைக் கண்டுகளித்தார்களாம்.

இராஜகிரகத்தில் விருந்துச்சாலையில் சம்பிரமமாகவிருந்தும் நடந்தது. அச்சமயத்தில் கடவுளைவணங்கி தம்பதிகளை ஆசீர்வதிப்பதுண்டு. அப்படியே நமது காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியாரவர்கள் செய்தார்கள்.

இந்தயிடத்தில் ஸ்தலம் போதாமையால் இனனும் 300 விருந்தாளிகள் நடனசாலையில் விருந்துண்டார்கள். இச்சமயம் பாண்ட்வாத்தியம் முழங்கிற்று. இரண்டரை மணிக்கு ராஜவம்சத்து ரிஜிஸ்டரில் தம்பதிகளும் இவர்களுடைய நெறுங்கிய பந்துக்களும் தங்கள் தங்கள் கையெழுத்தை எழுதினார்கள். இது ஆங்கிலேயரின் வழக்கம்.

அரண்மனையிலிருந்து லிவர்பூல் தெருவு, ஸ்டேஷன் மார்க்கமாக ஜார்ஜ் சக்ரவர்த்தியும் மேரி ராணியும் சவாரிபோக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விவாகதினத்தில் எவ்வளவு ஜனங்கள் இவர்களைப் பார்க்கக்கூடுமோ அவ்வளவுபேரும் இவர்களைக் கண்டுகளிக்குமாறு இவ்வித ஏற்பாடுசெய்யப்பட்டது. அன்றையதினம் சூரியன் உக்கிரமின்றி பிரகாசித்துக்கொண்டிருந்தது யாவருக்கும் சந்தோஷததையுண்டாக்கியது. மூடுவண்டியின்றி நாலுகுதிரைகள் பூட்டியவண்டியில் தம்பதிகள் ஏறிக்கொண்டு சவாரிசென்றார்கள. மேரி ராணியார் வெண்ணிறமுள்ள உடுப்பைத்தரித்துக்கொண்டுபோனார்கள். பொன்வர்ணமுள்ள குல்லாயின்மேல் விலையுயர்ந்த வெள்ளை இறகுகளை வைத்துக்கொண்டிருந்தார்கள்.

சாயங்காலம் சுமார் 5-மணிக்கு இவர்கள் புறப்பட்டார்கள். இவருடைய தகப்பனார் அப்பொழுது இளவரசராகயிருந்தார். இவர் தமது புத்தி

ரர்மீது உயிரும் பிராணனு மாயிருந்தார். அவ்விதமிருந்தமையால் தம்பதிகளை மங்களகரமாக ஆசிர்வதிக்கும் பொருட்டு இவர் எடின்பரோ பிரபுவுடனும், சேம் ப்ரிட்ஜ் பிரபுவுடனும் இவர்கள் புறப்படும் சமயத்தில் வந்து வண்டிக்குப் பின் ஒரு பிடி அரிசியை எடுத்துவாரி இறைத்தாராம்.

ஒரு குதிரைப்படை இவர்கள் கூட செல்லுகையில் ஜனங்கள் வழியில் இடைவிடாது தங்கள் குதூகலிப்பைக் காட்டிக்கொண்டு வந்தார்களாம். தெருக்களில் செய்யப்பட்டிருந்த அலங்காரங்களோ மனதைக் கவர்ந்தனவாம். லண்டன்மா நகரத்து தெருக்கள் ஒருபொழுதும் இப்பொழுது இருந்த மாதிரி தென்படவில்லையாம். சவாரி செல்லுகையில் நமது ஜார்ஜ் சக்ரவர்த்தி தமது டொப்பியை அடிக்கடி எடுத்து உயர்த்தி காட்டிக்கொண்டே வந்தாராம். இது ஜனங்களுக்குச் செய்யும் மரியாதை. இவருடைய சுந்தரமான மனைவி சவாரி முடியும் வரையில் புன்சிரிப்புடன் தலைவணங்கி வந்தார்களாம்.

இவர்கள் சேண்ட்பால் கேதீட்ரல் சமீபத்தில் வந்தபொழுது லண்டன்மா நகரத்து அதிகாரி (Lord Mayor) நாலு குதிரைகள் பூட்டிய வண்டியில் ஏறிக்கொண்டு சக்ரவர்த்தியுடன் வந்தாராம். இன்னும் ஷெரிப் முதலிய உத்தியோகஸ்தர்களும் வந்தார்கள். இவர்கள் மேன்ஷன் அவுஸூக்குப் போனார்கள். இங்கு சிறிதுநேரம் தங்கினார்கள். லேடிமேயரஸ் (அதிகாரியின் மனைவியார்) புஷ்பச் செண்டை தம்பதிகளுக்கு அளித்தார்கள். இவர்களுடைய இரண்டு சிறிய பேரப்பிள்ளைகள் ரோஜா இலைகளையும் புஷ்பங்களையும் எடுத்து மேரிராணியார்மீது புஷ்பமாரி பொழிந்தார்கள்.

கோடிக் கணக்கான ஜனங்களிருந்த லிவர்பூல் ஸ்ட்ரீட் ஸ்டேஷனில் ரயில்வே மானேஜருடைய பெண் குழந்தை இவர்கள் சன்ட்ரிங்காமுக்கு ரயிலில் ஏறிப்போவதற்கு முன் பற்பல வர்ணமமைந்த புஷ்பச்செண்டை ராணியாருக்குக் கொடுத்ததைப் புன்சிரிப்புடன் ஏற்றுக்கொண்டார்கள். கேம்ப்ரிட்ஜில் சக்ரவர்த்தியும் ராணியாரும் தங்கி லண்டன்மா நகரத்து அதிகாரியும் கார்பொரேஷனு மளித்த வந்தனோபசாரப் பத்திரத்தைப் பெற்றுக்கொண்டு தக்கபதி லளித்தார்கள்.

இங்கிருந்து புறப்பட்டு வுல்பர்டனுக்குச் சென்றார்கள். அப்பொழுது இரவு 8-மணியாயிற்று. இங்கிருந்து சென்ட்ரிங்காமிலுள்ள யார்க் காட்டேஜூக்குப் புறப்பட்டார்கள். ராஜபாட்டையில் தம்பதிகளைப்பார்க்க கணக்கில்லாத பிரஜைகள் கும்பலாய் ஆவலுடன் நின்று கொண்டிருந்தார்கள். இவர்கள் வருவதைக் கண்டு ராஜவிசுவாசத்துடன் இவர்களை வாழ்த்தியும் கரகோஷமும் செய்து வந்தார்கள்.

அன்றையதினம் பிற்பகலில் சன்ட்ரிங்காமிலுள்ள குடித்தனக்காரர் கூட்டமாகச் சேர்ந்து இவ்விவாக மகோற்சவத்தைக் கொண்டாடினார்கள். யாவரும் ஒன்று சேர்ந்து விருந்துண்டார்கள். அநேக நூற்றுக்கணக்கான பாடசாலைப் பிள்ளைகளுக்குச் சிற்றுண்டியும் தேயிலைத் தண்ணீரும் கொடுத்தார்கள்.

இல்லறம் நடத்தப் புகுந்த இவ்விருவர்களும் இவ்விதம் ஊர்வலம் வந்தமையால் இளைப்புற்று தங்களது யார்க் காட்டேஜூக்கு வந்து சேர்ந்தார்கள்.

இவர்கள் இங்கு வந்த தக்ஷணமே அங்குள்ள பொது ஜனங்களும் ஜலத்தால் சூழப்பட்ட சிறிய தீவுகளிலும், குன்றுகளிலும் லக்ஷக்கணக்கான விளக்குகளை ஏற்றிவைத்தார்களாம். நமது ஜார்ஜ் சக்ரவர்த்தி குழந்தைப்பருவமுதல் இங்கு தங்கியிருந்தமையால் இவர்களுக்கு நன்றாகத்தெரியும். ஆகையால் இவர்கள் கொண்ட சந்தோஷத்திற்கு அளவே கிடையாது. இவர்கள் வாழ்த்திய வாழ்த்துடன் சக்ரவர்த்தி ராணியாருடைய சந்தோஷமான விவாக மகோற்சவம் முடிவுபெற்றதென்றே சொல்லலாம்.

காலஞ்சென்ற நமது விக்டோரியா மகாராணியார் பின்வரும் தமது இராஜ்யங்களிலுள்ள பிரஜைகளுக்கு அன்பு வாய்ந்த கடிதம் ஒன்று எழுதி அனுப்பினார்கள்:—"எனது பிரியமுள்ள பேரனாகிய யார்க் பிரபுவுக்கும் அவரது அன்புக்கினிய மணமகளாகிய மேரி ராணிக்கும் விவாகம் நடந்த காலத்தில் எல்லாதேசத்து ஜனங்கள் அனுப்பியவாழ்த்துக்கும் அவர்கள்கொண்ட சந்தோஷத்திற்கும்,ராஜபக்திக்கும்,விசுவாசத்துக்கும்-ஆச்சரியமாய்எடுத்துக் காட்டியதைக்குறித்து-நான் மனமுருகி சந்தோஷப்பட்டு எனது அன்புள்ள பிரஜைகளுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். நிச்சயமாகவே இப்படி எனது பிரஜைகள்செய்தது புதிதுமல்ல, முதற்தடவையுமல்ல; ஏனென்றில் நான் சுகித்து வாழும்பொழுதும், துக்கித்துவாழும் காலத்திலும் இப்பொழுது நான் அதிகமாய் உணரும்மாதிரி சிரத்தையாயும் அன்பாயும் அனுதாபம் எப்பொழுதும் காட்டிவருகின்றீர்கள். எனது ஹிருதயம் எனது விசாலமான ராஜ்யத்திலுள்ள ஜனங்களின் சுகதுக்கங்களுக்காக உண்மையாகவே படபடவென்று அடித்துக்கொண்டிருப்பது தங்களுக்குத் தெரியுமென்பதையும் நான் அறிவேன். இவ்வித உணர்ச்சி எனக்கும் உங்களுக்குமிருப்பது இவ்வகண்ட ராஜ்யத்தின் உண்மையான பலத்தை எடுத்துக்காட்டுகிறது. நீங்கள் எனது பிரியமுள்ள பேரன் பேத்தி முதலியவர்களின் க்ஷேமத்தைக்கோருவதிலும் பிரார்த்திப்பதிலும் நானும் உங்களுடன் சேருகிறேன்."

5-வது அதிகாரம்.

பொது விஷயங்களில் ஊக்கம்.

1894-ம் வருஷ ஆரம்பத்தில் ஆஸ்ட்ரேலியாவுக்கு வந்துபோகும்படி அழைப்புப்பத்திரம் வரவே, இன்னொரு சமயம் தாம் தமது மனைவியுடன் வருவதாகவும் இச்சமயம் வரமுடியாதென்றும் ஜார்ஜ் சக்ரவர்த்தி சொல்லிவிட்டார். சன்ட்ரிங்காமில் வசந்தகாலத்திலும், கோடைகாலத்திலும் தமது மனைவியுடன் வசித்துவந்தார்.

மார்ச்சுமீ 13-ம் தேதியன்று செண்ட்ஜேம்ஸ் அரமனையில் ராணிக்குத் பதிலாக தங்களை யாவரும் தெரிசிக்குமாறு ஏற்பாடு செய்யப்பட்டது. ராஜா முதலிய பெரியோரைத் தரிசிக்கும் கூட்டத்திற்குத் லெவி என்று பெயர். இது நமது சென்னை கவர்ன்மெண்டு ஹவுஸில் அடிக்கடி நடந்துவருகிறது யாவருக்கும் தெரிந்திருக்கும். இக்கூட்டத்திற்கு எல்லா பிரபுக்களும் வந்திருந்தார்களாம். இது வெகு விமரிசையாக நடந்தேறியது.

எப்பிரல் மாசத்தில் வோர்ஸஸ்டருக்குப் போய் விக்டோரியா இன்ஸ்டிட்யூடுக்கு கட்டடம் கட்டுவதற்காக அஸ்திவாரக்கல்லை நாட்டினார். பின்பு

இங்கு கீர்த்திபெற்ற ஆலயத்தையும், பீங்கான் வேலைசெய்யும் சாலையையும் போய்ப்பார்த்துவிட்டு, நியூகேஸலுக்குச் சென்று அங்கு பொது ஜனங்களுக்குரிய பலகாரியங்களைச் செய்தார்.

தமது சிறு தகப்பனாருடைய ஒரு குமாரத்திக்கும் ருஷியா சக்ரவர்த்தியின் குமாரனுக்கும் விவாகம் ஏப்ரல் மாசத்தில் நடத்துவதாக நிச்சயமாயிற்று. இவ்விவாகம் நடந்தேறியவுடன் கோபர்க்கில இவரது சிற்றப்பனுடைய இன்னொரு குமாரத்திக்கும் விவாகம் நடந்தது.

இளவரசாயிருந்த 7-வது எட்வர்ட் அப்பொழுது கென்ஸிங்டனிலுள்ள சங்கீதம் போதிக்கும்படியான ராயல் காலேஜினைத் திறந்தார். அச்சமயத்தில் நமது ஜார்ஜும் மேரி ராணியும் அவருடன் சென்றிருந்தார்கள். அந்த ஒரு விருந்து சாப்பாடு நடந்தபொழுது வியாதியுள்ள குழந்தைகளுக்கு ஒரு வைத்தியசாலை அவசியமென்பதை எடுத்து வாக்சாதுரியத்துடன் பேசினார் நமது ஜார்ஜ் சக்ரவர்த்தி.

இவர் ட்ரினிடி அவுஸ் கார்பொரேஷனுக்கு மாஸ்டராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். மாலுமித் தொழில் செய்த இவருக்கு இவ்வுத்தியோகம் ஒத்திருந்தது. பாப்லார் என்ற விடத்தில் கப்பலோட்டிகளுக்காக ஒரு சாலை திறக்கப்பட்டபொழுது இவர் அங்கு போயிருந்தார். இவர் தகப்பனாரும் போயிருந்தாராம். ஒரு மாலுமித்தொழில்செய்யும் சிறியபையனை ஒருபையைத் தமது தகப்பனாருக்குக் கொடுக்க வழிகாட்டி யனுப்பினாராம். இது இவருக்கு தமது பழமையான வேலையிலுள்ள அபிமானத்தையும் காண்பிக்கின்றதல்லவா?

1894-ம் வருஷம் ஜூன்மாதம் 23உ ஜார்ஜ் அரசருக்கு ஒரு ஆண்குழந்தை ஜனித்தது. இச் சந்தோஷமான சமாச்சாரம் யாவருக்கும் தெரியவே, மனமகிழ்ந்தார்கள். ஏனெனில் இவருக்குப்பின் யார்க்குப் பிரபு இவர்தான் ஆகவேண்டியதல்லவா? ஆனதுபற்றி எல்லாரும் ஆநந்தங்கொண்டு இக்குழந்தை தீர்க்காயுளுடனிருக்கவேண்டுமென்று ஆசிகூறினார்கள். இவரது தாயாரும், மாமியாரும் வோயிட்ஹவுஸில் பிரசவம் நடக்கும் சமயமுதற் கொண்டிருந்தார்கள்.

விக்டோரியாராணியாரவர்கள் மேரிராணியார் பிரசவித்த இரண்டு தினங்கள் சென்றபின் சிம்மாசனத்திற்கு மூன்றாவது சுதந்தரவாளியாகிய இக்குழந்தையைப் பார்க்க வந்தார்கள். இக்குழந்தை பிறந்தது சோதியுள்ள கோடைகாலம்போலிருந்ததாம். இந்தநற்சமாச்சாரம் இங்கிலாந்தெங்கும் பரவவே, சந்தோஷத்தைத் தெரிவிக்கும் கடிதங்கள் பலவந்து குவிந்தன. ஒரு மாசமானவுடன் இக்குழந்தைக்கு ஞானஸ்னானம் செய்வித்து எட்வர்ட் ஆல்பர்ட் க்ரிஸ்டியன் ஜார்ஜ் அண்ட்ரூபேட்ரிக் டேவிட். என்னும் பேருமிட்டார்களாம்.

எப்பொழுதும் கைக்குழந்தையைக் காப்பாற்றிவருவது எவருக்கும் கஷ்டமல்லவா? நமது ராணியார் இவ்வருஷம் தமது குழந்தையை மிக்க கவலையுடன், காப்பாற்றுவதிலேயே யிருந்தார்கள். குழந்தை யாதொரு பிணியின்றி வளர்க்க, வளர்ந்து வந்தது எல்லாருக்கும் அதிகச் சந்தோஷத்தை

யளித்தது. ப்ரின்ஸ்டேவிட் என்று இக்குழந்தையைப் பந்துக்கள் கூப்பிட்டு வந்தார்கள். இக்குழந்தைக்குப் பாட்டி, பாட்டன், அத்தை, மாமா முதலிய உறவினர்களுண்டு. இவர்களுக்கு இக்குழந்தையின்மீது அத்தியந்த பிரியம்.

1895-ம் வருஷத்தில் ஆசியாவின் கிழக்கு பாகத்தில் நடந்துகொண்டிருந்த யுத்தம் மனவெழுச்சியை யுண்டாக்கிக் கொண்டிருந்தது. நமது ஜார்ஜ் சக்ரவர்த்தி போர்ட் ஆர்தர் பிடிபட்ட சங்கதி முதலிய சமாச்சாரங்களை மிக்க ஆவலுடன் படித்து வந்தார்.

ஜார்ஜ் சக்ரவர்த்தி ஜெனரல் போஸ்ட் ஆபிஸை பிப்ரவரி மாசத்தில் போய்ப் பார்த்தாராம். இதுதான் முதற்றடவையாம். அப்பொழுது ரைட் ஆனரபுல் ஆர்னல்ட்மோர்லி போஸ்ட்மாஸ்டர் ஜெனரலாகயிருந்தார். இவர் அப்பொழுது சீர்திருத்தங்கள் செய்திருந்தார். அவர் ஏற்படுத்திய நல்ல முறைகளை யெல்லாம் கண்டுகொண்டார்.

சிலகாலஞ் சென்றபின்பு இவருக்கு இன்புளுயன்ஸா என்ற சுரம்கண்டது. யார்க்ஹவுஸில் சிலவாரங்களாக இச்சுரத்தால் வருந்தி வந்தபோதிலும் சீக்கிரத்தில் சௌக்யமடைந்தார். நார்போக் பிரபு இவரையும் ராணியாரையும் ஷேப்பீல்க்கு வரவழைத்து விருந்து செய்து வைத்தார். ஜார்ஜூம் ராணியாரும் மிகமகிழ்ந்து இன்னும் அங்கு நடந்த பொதுக்காரியங்களுக்குச் சென்று அங்குநடந்தவைபவங்களில் மிக்கஅக்கரை எடுத்துக்கொண்டார்கள்.

இவ்விதம் இங்கு இவர்கள் ஜனங்களிடத்தில் அன்புகொண்டு அதிக விருப்பத்துடன் பொதுவிருந்து முதலியவைகளுக்கு வந்து அங்குள்ளவர்களுடன் சரசமாய்ப் பேசிவந்தமையால், ஜனங்கள் இவர்கள்மீது நல்ல அபிப்பிராயங் கொண்டார்கள். இவருடைய தகப்பனுரும் இவரை ஒவ்வொரு பட்டணத்தையும் பார்த்து வரும்படியான பொறுப்பை ஏற்படுத்தினூர். இவரும் தமது பிதாசொன்னபடி நடந்து யாவராலும் புகழப்பட்டுவந்தார்.

நமது புதுக்கவர்னரின் விஜயம்.

இம் மாதம் முதல்தேதி பகல் ஒரு மணிக்கு 'ஸிம்லா' என்ற ஸ்டீமரில் நம் புதுக்கவர்னர் ஸர் கிப்ஸன் கார்மைகேல் அவர் மனைவி மக்களுடன் துறைமுகம் வந்து இறங்கினர். கவர்ன்மெண்ட் சீப் செக்ரிடரி ஸர் ஹாரல்ட் ஸ்டூவர்ட் எதிர்கொண்டுபோய் அழைத்தார். மற்ற கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களும் ஷெரிப் முதலானவர்களும் போயிருந்தார்கள். கவர்னர் கப்பலை விட்டு இறங்கி மவுண்ட் ரோட்டிலுள்ள கவர்ன்மெண்டு ஹவுஸூக்குப் போன வழியில் ஜனக்கும்பல்கள் இருந்து ஆரவாரம் செய்தார்கள். கவர்ன்மெண்ட் ஹவுஸ் வாராவதியில் இரண்டு பக்கத்திலும் பொப்பிலி மகாராஜா போட்ட ஒருவளைவும் வெங்கடகிரி ராஜா போட்டிருந்த ஒருவளைவும் அலங்காரமாய்க் கட்டப்பட்டிருந்தன. புதுக்கவர்னர் வந்ததற்கு அடையாளமாக 17 குண்டுகள் போடப்பட்டன.

இவர் அன்று மாலை4-30 மணிக்கு போர்ட்டு ஸெயிண்டு ஜார்ஜூகௌன்ஸில் சேம்பருக்குச் சென்றூர். அங்கு ஆக்டிங்கு சீப் ஸெக்ரிடரி மிஸ்டர்

H. A. ஸ்டுவர்ட் இவருக்கு மகாராஜா சக்கரவர்த்தி அவர்கள் சென்னைக் கவர்னர்வேலையைக்கொடுத்த ராயல் ஸயன் மானியுவலைப் படித்தார். உடனே 17 மரியாதைக் குண்டுகள் போடப்பட, மிஸ்டர் S. T. கிப்ஸன் கார்மிகேல் கவர்னர் ஸ்தானத்தை வகித்தார்.

இவர் 1859-ம் வருஷம் பிறந்து கேம்ப்ரிட்ஜிலுள்ள ஸெயிண்டு ஜான் காலேஜில் படிப்பிக்கப்பட்டார். 1881-ல் B. A. பரீக்ஷையிலும், 1884-ல் M. A. பரீக்ஷையிலும் தேறினர், 1895-ம் வருஷம் மிட்லோதியன் கவுண்டிக்கு காலஞ்சென்ற W. E. கிளாட்ஸ்டனுக்குப் பிறகு பிரதிநிதியாய்ப் பார்லிமெண்டில் மெம்பர் ஸ்தானம் வகித்தார். 1908-ல் விக்டோரியாவுக்குக் கவர்னராய் நியமனம் பெற்றார். இவர் லிபரல் கக்ஷியினர். விக்டோரியா கவர்னராய் இவர் 3-வருஷகாலம் வேலைபார்த்ததில் மிகவும் சாமர்த்தியமாகவும் பிரஜைகளிடத்து இரக்கத்துடனும் ஆண்டுவந்ததால் இவரது சென்னைக் கவர்னராட்சி பெரிதும் குணமாக இருக்குமென்று நம்ப இடமுண்டு". அவ்விதம் ஆண்டுவர இவருக்கு தீர்க்க ஆயுளையும், தேகபலத்தையும் ஈசன் அளிப்பாராக.

லிங்கோவும், ராக்ஷதனும்.

(Copy-Right Reserved.)

ஒருபட்டணத்திற்கு வெகுதூரத்தில் ஒருபெரிய காடுபிருந்தது. அதில் பற்பல மரங்களும், விலங்குகளுமிருந்தன. அக்காட்டின் மத்தியில் ஒருபெரிய விருக்ஷமிருந்தது. இது வெகுகாலமாக யிருந்ததாம். இது, ஸ்ரீகாயத்தை அளாவிக்கொண்டு பலகிளைகளுடனும், பசுமையான இலைகளுடனும் அழகான புஷ்பங்களுடன் பார்க்க வெகு அழகாகயிருந்தது. இதன் அடியில் சுமார் 1000 பேர் வரையில் உட்கார்ந்திருக்கலாம். நிழலிருந்து கொண்டேயிருக்கும். ஒருசமயத்தில் வசந்தகாலத்தில் முந்திய வருஷங்களைவிட இதிலுள்ள புஷ்பங்கள் மிக ரம்மியமாகயிருந்தன. ஒருகிளையில் ஒரு மொட்டு உருண்டையாக வெண்நிறத்துடனிருந்தது. இதுமற்ற மொட்டுகளைவிட பெரிதாகயிருந்தது. பசுமையான இலைகளுக்கு மத்தியில் இது இருந்தமையால் வெகு அழகாகத்தோன்றிற்று.

மற்ற மொட்டுகளைவிட இதுமாத்திரம் என் மிக்க பெரியதாகயிருக்கிறதென்று அதிக ஆச்சரியமடைந்த இலந்தைமரம் அத்திமரத்தைக்கேட்டது.

அத்திமரம்; ஆ! ஆ!! இதனிடத்தில் ஒரு அற்புதமுண்டு. அது இரகசியமானது. நடு இரவில் புயலும் காற்று மிருந்தாலொழிய அது புஷ்பமாகாது. அது புஷ்பமாய்விட்டால் அதில் ஒரு விநோதப்பொருளைக் காண்பாய் என்றது.

இலந்தைமரம்:—என்ன? நடு இராத்திரியிலா? என்று கேட்டது.

ஆம்; மின்னலும் மின்னுமல்லவா? அதன் மூலமாக நீ அதிசயத்தைப் பார்க்கலாமென்றது.

571

அப்படியே அன்றிரவு நடு இராத்திரியில் புயல்காற்று அடித்தது. இடி இடித்தது. மின்னல் மின்னிற்று. மழை தாரை தாரையாகப் பொழிந்தது. இதைப் பார்க்க இலந்தைமரம் மிகப்பயப்பட்டது. நடுநடுங்கி தலை குனிந்து விட்டது. அத்திமரம் கூடபயந்து காற்று மழைக்கு ஆடிக்கொண்டிருந்தது. ஆனால் அந்தப்பெரிய மரமோ சிறிதும் அப்பெரும் சண்டமாருதத்திற்கு அஞ்சாமல் தனது கிளைகளையெல்லாம் கீழே தாழ்த்திக்கொண்டு உருண்டையான வெண்மைநிறமுள்ள மொட்டுள்ள கிளையை மெதுவாக பூமியில்படும்படி தாழ்த்தி தைரியமாக வைத்தது.

அந்தக்கிளை மெதுவாக அக்குழந்தையைப் பசுமையான புல் நிறைந்த தரையில் படுக்கும்படி சரித்துவைத்தது. இக்குழந்தை ஆகாயத்தில் மின்னல் மின்னிக்கொண்டிருப்பதைப்பார்த்துக்கொண்டு புன் சிரிப்பு கொண்டிருந்தது. மழையும் உடனே நின்றுவிட்டது. வெடியற்கால மானதும் காற்றுமில்லை, மழையுமில்லை. குழந்தை தனது சிறு கையால் அழகிய புஷ்பக்கொத்தை எடுத்து விளையாடிக்கொண்டிருந்தது. இப்பத்திரி கையிலுள்ள படத்திலும் குழந்தை கையில் பூங் கொத்திருப்பதையும் குழந்தை அழகா யிருப்பதையும் பாருங்கள்!

அத்திமரம், இலந்தை மரமே! இக்குழ

ந்தையைப்பார்! இதற்கு வெண்பட்டால்செய்த உடுப்பு தரித்திருக்கிறதைப் பார்! அதுவும் இக்குழந்தை எந்தபுஷ்பத்திலிருந்து பிறந்ததோ அதே புஷ்பத்தின் வர்ணமுள்ளதா யிருக்கிறது. குழந்தையின் நடுநெத்தியில் வைரம் மின்னிக்கொண்டிருப்பதையும் பார்! இக்குழந்தை விநோதமாயிருக்கிறதென்றது. இலந்தைமரம், அது வைரமா அல்லது நக்ஷத்ரமா? என்று கேட்டது. அது பளபளப்பாய் பிரகாசித்துக் கொண்டிருந்தமையால் அத்திமரத்திற்கும் இலந்தைமரத்திற்கும் இது இன்னதென்று கண்டுபிடிக்க முடியவில்லை.

நரிகளும், கிளிகளும், குரங்குகளும் மைனாக்குருவிகளும் இக்குழந்தையைப் பார்க்கவந்தன.

எனக்குள்ள மெல்லியரோமம் இதன் தேகத்திலுமிருந்தால் வெகு நன்றாயிருக்குமென்று நரிசொன்னது.

எனக்கிருப்பதுபோல் அழகிய இறகுகளிருந்தால் நலமென்றது கிளி.

எனக்கிருப்பதுபோல் சிறிய சிறகிருந்தால் வெகு அழகாயிருக்குமென்று மைனாக்குருவிகள் இங்குமங்கும் துள்ளிப்பறந்துகொண்டு சொல்லின.

இது விநோதமான குழந்தையாயிருக்கவேண்டும், அப்படியில்லாவிடின் இதன் நெற்றியில் நக்ஷத்திரத்துடன் இது பிறந்திருக்கிறதென்று அத்திமரம் சொன்னதை எல்லாம் கேட்டு ஒத்துக்கொண்டது.

சுமார் 11-மணிக்கு குழந்தைக்குப் பசிஎடுக்க ஆரம்பித்தபடியால் அழுதது. ஆனால் அச்சமயத்தில் அத்திமரம் அதன்வாயில் தேனைச்சொட்டிற்று; உடனே குழந்தை மறுபடியும் புன்சிரிப்புடன் தென்படவே தேன் சொட்டுவதும் நின்றுவிட்டது.

சூரியாஸ்த மனவேளையில் ஒரு பெண்புலி அவ்வழியாகப் போகையில் குழந்தையைக் கண்டு "எனது புலிக்குட்டிகளுக்கு இன்று இராத்திரி போஜனத்திற்கு இதுபோதும். நான் வேகமாய்ப் போய் அவைகளை இட்டுக்கொண்டு வருகிறேன்" என்று சொல்லிப் போயிற்று.

ஆனால் புஷ்பங்களும், புல் பூண்டும் இவ்வார்த்தைகளைச் செவியுற்று அப்புலி திரும்பி வரும்பொழுது அது குழந்தையைப் பார்க்க முடியாவண்ணம் மறைத்து வைத்துக் கொண்டது.

இது எங்கள் குழந்தை. விருக்ஷங்களுக்கும், புஷ்பங்களுக்கும் இதுசொந்தமானது. யாதொரு தீங்கும் இதற்கு வராம லிருக்கும்படி நாங்கள் பார்த்துக்கொள்வோம் என்று சொல்லிற்று.

புலி திரும்பிவந்து பார்த்தது. குழந்தையைக் காணாமையால் திரும்பிப் போயிற்று.

பின்பு மற்ற மரங்கள் "இக் குழந்தைக்கு எந்தப்பெயரை யிடலாமென்று" பெரிய விருட்சத்தைக் கேட்டன.

"அவன் பெயர் லிங்கோ. அவனை வெகு சாக்கிறதையாகக் காப்பாற்றுங்கள். காட்டில் தெரிந்து கொள்ளவேண்டிய இரகசியங்களை யெல்லாம் இக் குழந்தைக்குப் போதியுங்கள்" என்று அந்தப் பெரிய மரம் சொல்லிற்று.

அவ்விதமே காட்டு விலங்குகளும், புஷ்பங்களும் தங்களுக்குத் தெரிந்த எல்லா இரகசியங்களையும் லிங்கோவுக்குச் சொல்லிக் கொடுத்தன. அங்கு சமீபத்தில் ஒரு நதியிருந்தது. அதில் தாமன் என்கிற ஆமை வசித்துக்கொண்டிருந்தது. லிங்கோ வளர்ந்துவந்தான், அந்த ஆமை வயதாக ஆக, லிங்கோவுக்கு நீந்தவும் சொல்லிக் கொடுத்தது. குரங்குகள் ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்திற்குத் தாண்டவும் இக் குழந்தைக்குப் போதித்து வந்தது. மைனாக் குருவிகளும் கிளிகளும் பழங்களிருக்கு மிடங்களையும், தேன் இருக்கும் இடத்தையும் காண்பித்தன. இவன் காயமடைந்தால் அதை சொஸ்தப்படுத்திக்கொள்ளத் தகுந்த மருந்து செடிகளையும் காட்டிலுள்ள பாம்புகளைப் பிடித்து ஆடவும் கற்றுக் கொண்டான். வீட்டில் தாய் தந்தைகளுடன் வசிக்கும் குழந்தைகளுக்குத் தெரியாத அநேக அற்புதங்களை யெல்லாம் கற்றுக்கொண்டான் லிங்கோ.

இராக்காலங்களில் தொட்டிலில் படுத்து தூங்குவான். இது முறுக்குள்ள படர்கொடிகளால் செய்யப்பட்டு அத்திமரத்தின்கீழ் தொங்கவிடப்பட்டிருந்தது. இதீ குரங்குகளின் வேலை. புஷ்பங்கள் அவனுக்கு மெத்தையாகவும் போர்வையாகவு மிருக்கும். தினம் காலையில் நதியில் ஸ்நாநம் செய்வான். சிறிது நேரம் நீந்துவான். இவன் ஜனனகாலத்தில் கடவுளால் அளிக்கப்பட்ட சட்டையைத் தண்ணீரில் கசக்கி வெயிலில் உலர்த்திவைப்பான். உலர்ந்த பின் இதைத் தரித்துக்கொள்வான். இதுவும் இவன் பெரியவனாக வளரும் போதெல்லாம் சட்டையும் இவனுக்குச் சரியாக ஆய்விடும். இது கெட்டுப் போவதுமில்லை, கிழிந்துபோவதுமில்லை. புதிதாகவே எப்போதும் தோன்றும். லிங்கோ உயரமாக வளர்ந்து அழகுள்ள வாலிபனானான். பலசாலியாகவும் பயப்படாமலு மிருந்தபோதிலும் நல்லவனாகவும், சாந்தமுள்ளவனாகவு மிருந்தான்.

காட்டிலுள்ள மிருகங்களும், பக்ஷிசாதிகளும், செடி, கொடி, மரம், புஷ்பம் முதலியவைகளும் இவனிடத்தில் அதிக நேசமாயிருந்தன. முதலில் இவனை தனது குட்டிகளுக்கு ஆகாரமாக வைத்துக்கொள்ளலாமென்று நினைத்த பெண்புலியும் கூட இவனிடத்தில் மிக்கப்பிரியமாயிருந்து இவன் இட்ட வேலையைச் செய்துவந்தது.

இவ்விதம் சுகமாக வாழ்ந்து வருகையில் லிங்கோ ஒருநாள் அந்தப் பெரிய தாய் விருக்ஷத்தைப் பார்த்து "என்னைப்போல் வேறொருவருமில்லை



யா" வென்று கேட்டான். இங்கு புலி, கரடி, குரங்கு, கிளி, மைனா, முதலிய மிருகங்களும், பக்ஷிகளு மிருக்கின்றனவே! லிங்கோ ஒருவன் தானா இருக்கிறான்?" என்றும் கேட்டான்.

"அவ்விதம் தெரிந்து கொள்ள நீ ஏன் விரும்புகிறாய்?" என்று அம்மரம் கேட்டது.

"நான் அவர்களைப்பார்க்க விரும்புகிறேன்" என்று லிங்கோ சொன்னான். "அப்பா, மகனே, இம்மரத்தின் கிளையின் உச்சிக்குத் தாவிப்போய் நீ அங்கு எதைக் காண்கிறாய் என்பதை எனக்குச் சொல்" என்றது அம்மரம். அப்படியே லிங்கோ அவ்வுயர்ந்த மரக்கிளையின் உச்சிக்குப் போய் நாலா பக்கத்திலும் பார்த்து, "செங்குத்தான பாறையையுடைய ஒருமலை எனக்குத் தெரிகிற" தென்றான்.

"அதுதான் ஊசிபோன்ற வடிவமுடைய மலை; அதன் உச்சிக்கு சமீபத்தில் பற்பல வர்ணமும் பிரகாசமுமான புஷ்பங்கள் நிறைந்தமரம் இருக்கிறதல்லவா? அதற்குப்பெயர் கித்சாதித்தா. அம்மரத்திற்குச்சென்று புஷ்பங்களை எடுத்து வாசனைப் பார்த்து (மோந்து பார்த்து), எனது நான்கு சகோதர்களும் எங்கேயிருக்கிறார்களென்று கேள்" என்று பதில் சொன்னது.

அவ்விதமே லிங்கோ ஊசிபோன்ற முனையுள்ள மலையைச் சேருமளவில் காட்டில் ஓடினான். கித்சாதித்தா என்ற விருக்ஷத்தைக் கண்டு ஒரு புஷ்பத்தை எடுத்து மோந்துபார்த்து, "எனது நானகு சகோதரர்களும் எங்கே" என்று கேட்டான்.

கித்சாதித்தா: "இந்த மலைக்கு அடுத்த பக்கத்தில் அவர்கள் இப்பொழுது இராத்திரி போசனம் புசித்துக்கொண்டிருக்கிறார்கள்" என்றது.

லிங்கோ உடனே மலையின் அடுத்தப் பக்கத்திற்குப் போனான். அந்நான்கு சகோதரர்களும் ஒருமானைக் கொன்று புசிக்க ஏற்பாடுசெய்துகொண்டிருந்தார்கள்.

இச்சிறுபாலனுடைய நெற்றியில் பிரகாசமான ஒரு நக்ஷத்திரமிருப்பதையும், வெண்மையான பட்டு சட்டையைத் தரித்திருப்பதையும், அன்பும், புன்சிரிப்பும் அவன் முகத்தில் குடிகொண்டிருப்பதையும் கண்டு மிக மகிழ்ந்து இவர்கள் அவனைச் சந்திக்கச் சென்றார்கள்.

"நாங்கள் நாலுபேரும் சகோதரர்கள். ஒருமிக்க இங்கு வாழ்ந்து வருகிறோம். நீயும் ஐந்தாவது சகோதரனாக எங்களுடனிருக்க உனக்கு விருப்பமுண்டா" என்று கேட்டார்கள்.

"அதற்காகத்தான் நானும் இங்கு வந்திருக்கிறேன். இந்த அகண்ட காட்டிலுள்ள மிருகங்களுக்குக்கூட சகோதரர்களும், சகோதரிகளுமிருக்கின்றார்கள். எனக்கொருவருமில்லை. ஆகையால் சில சகோதரர்களைக் கண்டுபிடிக்க விரும்பினேன். சித்சாதித்தாவின் உதவியால் உங்களைக் கண்டு மகிழ்ந்தேன். இனி நாம் ஒரு மிக்க வாசம் செய்யலாம்" என்றான். அவர்களுக்கு நெருப்பு கிடைக்காமையால்தான் மானுடைய பச்சை மாம்சத்தைப் புசிக்க வேண்டியிருக்கிறதென்று அவர்கள் லிங்கோவினிடத்தில் சொன்னார்கள். மேலும் இவர்களில் இளைஞன் "எங்களுக்கு இரண்டு வஸ்துக்கள் தேவை. ஒவ்வொருவருக்கும் ஒரு மனைவியும், மான் இறைச்சியைச் சுட்டு பக்குவம் செய்து புசிக்க நெருப்பும் இங்கில்லாதது பெருங்குறைகள்" என்றான். மற்ற மூன்று சகோதரர்களும் உடனே, "சகோதரனே, அவன் தனக்கு ஒரு மனைவிபோதுமென்கிறான்; ஆனால் நாங்கள் மூன்றுபேரும் கோருவது அப்படியல்ல. ஒவ்வொருவருக்கும், இரண்டு மனைவிகளிருந்தால் நலமென்று விரும்புகிறோம்" என்றார்கள். தாங்கள் கோரும் மனைவிகளும் நெருப்பு மிருக்குமிடமும் தங்களுக்குத் தெரியுமென்று சொன்னார்கள்.

மூத்தவன் "இக்காட்டில் ஒரு தனிமையானயிடத்தில் ஒரு ராட்சதனிருக்கிறான், அவனுக்கு ஏழு புத்திரிகளிருக்கின்றார்கள். அவர்களுக்கு மணம் புரிந்துகொள்ள இஷ்டமிருக்கிறதாம்.

ஆனால் எங்களால் அந்த ராட்சதன் வீட்டைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றான்.

லிங்கோ, "எனக்கு ஒரு நாணலைமாத்திரம் கொடுத்தால்போதும் அவன் வீட்டை உங்களுக்குக் காண்பிக்கிறேன்" என்றான்.

மூத்தவன் சரேலென்று சிறிது தூரம்போய் ஒரு நாணலை எடுத்துக் கொண்டுவந்து லிங்கோ கையில் கொடுத்தான்.

லிங்கோ அந்த நாணலை வாங்கிக்கொண்டு அதை ஒரு வில்லாகச் செய்து கொண்டு, அதில் ஒரு அம்புவைத்து எய்தானும். அப்படி செய்தமையால் வழியில் இருந்த மரங்களெல்லாம் ஒடிந்துபோயிற்று, நல்ல நேரான வழி தென்பட்டது. இவன் எய்த அம்பு அந்த ராட்சதன் வீட்டிற்கு எதிரில் போய் விழுந்தது.

"சகோதரர்களே! என்னுடைய அம்பு உங்களுக்குச் சரியான வழியைச் செய்துவிட்டது. இதன் வழியாகவே போங்கள். நீங்கள் அந்த ராட்சதனுடைய அரமனையைக் காண்பீர்கள்" என்றான் லிங்கோ.

இந்த நால்வரும் லிங்கோசெய்த பாதையின் வழியாக ராட்சதனுடைய அரமனைக்குப் போனார்கள். இவர்கள் மெதுவாக நடந்து சென்றமையால் மூத்தவன் வேகமாக ஓடத் தலைப்பட்டான். இவன் வேகமாக முதலில் ராட்சதனுடைய அரமனைக்கு ஓடிவந்தான். தைரியமாக அரமனைக்குள் சென்று அங்குள்ள விசேஷங்களைக் கண்டுகளித்தான், நெருப்பிருக்கு மிடத்திற்குப் போனான். இது ஒரு பெரிய மண்டபத்தின் நடுவிலிருந்தது; இங்கு நெருப்புக்குச் சமீபத்தில் ராட்சதன் அயர்ந்து நித்திரை செய்துகொண் டிருந்தான்.

இவனுடைய மெத்தையோ 8 அடி உயரமும், 20 அடி நீள முள்ளதா யிருந்தது. இதை மூத்தவன் பார்க்க முடியவில்லை. ஏனெனில் இது இவனைவிட அதிக உயரமன்றோ?

நெருப்பு குண்டத்திலோ அடிமரங்களே யிருந்தன. சிறு கட்டைகள் கிடையாது. இது ஒருபெரிய நெருப்புமலைபோல் தென்பட்டது. சற்று இதைக் கண்டு பயந்தான். ஆயினும் எரிந்து கொண்டிருக்கும் ஒடிந்தகிளையொன்றை மெதுவாக எடுத்துக்கொண்டு ஓடிவந்தான். இப்படி இவன்வருகையில் இதிலிருந்து ஒருநெருப்புப்பொரிபறந்து ராக்ஷதன் தாடியில் விழுந்தது. நெருப்புப்பொரி தாடியில் பட்டவுடன் அதுபற்றி எரிய ஆரம்பித்து இவனுக்கு எரிச்சலையுண்டாக்கவே பயந்து எழுந்தான். மூத்தவன் நெருப்பை எடுத்துக்கொண்டு ஓடுவதைக் கண்டு அவனைப் பிடிக்க அவன் பின்தொடர்ந்தான். ராக்ஷதனால் ஓடமுடியவில்லை. தாடியெல்லாம் போய்விட்டது நெருப்பு புண் உண்டாக்கியது.

இவன் கன்னம், மோவாய்க்கட்டை முதலியவிடங்களில் அதன் நோவைப் பொறுக்கமுடியாமல் தனது அரைக்குச் சென்று தனது மனைவியைக் கூப்பிட்டு நடந்த சங்கதிகளைச்சொல்லவே, அவள் ஏதோ ஒருமருந்தை எடுத்துவந்து புண்ணாயிருக்குமிடங்களில் அதைத்தடவினாள்.

ராக்ஷதனுக்கு 7 பெண்கள் உண்டு, இவர்கள் மேற்கூறிய விஷயங்களைக் கேள்வியுற்று தங்கள் தகப்பனாரைப்பார்க்க ஓடிவந்து நடந்த சமாச்சாரங்களை விசாரித்தார்கள். தங்கள் தகப்பனாருக்குண்டான காயத்தைப்பார்த்து விசனமுற்று அது சீக்கிரத்தில் சொஸ்தமாய்விடு மென்றுசொல்லி தங்கள் தகப்பனாரைத் தேற்றினார்கள்.

ராக்ஷதனுக்கு வலி இல்லாமல் நின்றவுடன் பிரியமாகத்தன் அருமைக் குமாரத்திகளுடன் பேச ஆரம்பித்தான். அவர்கள் இதுதான் சமயமென்று அறிந்து "அப்பா! எங்களுக்கு எப்பொழுது விவாகம் செய்விக்கப்போகிறீர்கள்? "என்றுகேட்டார்கள்.

ராக்ஷதன் நான் உங்களுக்கு கணவர்களைத் தேடிவந்தேன். அவர்கள் அகப்படவில்லை. நல்லவர்களாயும், உயர்ந்த வம்சத்தைச் சேர்ந்தவர்களாயுமிருக்கவேண்டுமென்பது எனது பிரியம். கூடிய சீக்கிரத்தில் நல்ல கணவர்களை விசாரித்து உங்களுக்கு விவாகம் செய்து வைக்கிறேன் என்றான்.

இதற்குமுன் ஒருநாள் ராக்ஷதன் வெளியிற் சென்று இராத்திரி வீட்டுக்கு வந்து புசித்த பின் தூங்கும் சமயத்தில், இவனுடைய பெண்கள் தங்களது கலியாணப் பேச்சை யெடுத்தார்கள்.

ராக்ஷதன் இப்பொழுது முடியாது. ஒரே தடவையில் ஏழு கணவர்களையும் தனது புத்திரிகளுக்குத் தேடிசம்பாதிக்கமுடியுமா? இது முடியாதகாரியமென்று வெடுவெடுப்பாகச் சொன்னான்.

இவ்விதம் ஒரு வாரமாகக் கேட்டுக்கொண்டு ராக்ஷதனை அவனது பெண்கள் தொந்திரவு செய்து வந்தார்கள்.

இப்பொழுது இரண்டாவது குமாரத்தி அப்பா! ஒரு வாலிபன் நேற்று வேகமாக காட்டிற்குள் ஓடிக்கொண்டிருந்தானே! அவன் யார்? நாங்கள் அவனை நமது மெத்தையிலிருந்து பார்த்தோமென்று சொல்லி கேட்டாள். ஆமாம். அவனால் தான் எனக்கு இந்தப்புண் உண்டானது என்றான் ராக்ஷதன். அவனைத் தாங்கள் அனுப்பியது பிசகு. எப்படியாகிலும் நமது பெண்களில் ஒருத்திக்குயாவது அவன் கணவனாக யிருக்கலாமே! நேற்று காலையில் இந்த அம்பு நமது வீட்டிற்குள் வந்து விழுந்தது. இதைப் பின் தொடர்ந்து வேட்டையாடுபவர்கள் வருவார்கள் என்று நினைக்கிறேன். விதியை யாரால் வெல்லமுடியும்? நீங்கள் செய்து வருவதெல்லாம் தப்பான காரியமென்று" சொன்னாள் இவனது மனைவி.

ராக்ஷதர்களுடைய மனைவிமார்கள் கோபத்துடன் தங்கள் கணவர்களுடன் பயமின்றி பேசுவார்கள். இப்படி இவன் தன் மனைவி பேசியதைக் குறித்து பதிலொன்றும் சொல்ல வகையின்றி நித்திரை செய்யப் போய் விட்டான்.

தனது அரமனைக்குச் சமீபத்தில் ஒரு விருக்ஷமிருந்தது. அதின் உச்சியிலிருந்து இனிய குரலுடன் பாடும் பாடல்கள் இவன் காதில்விழுந்து இவன் நித்திரையைப் பங்கப்படுத்தியது. உடனே எழுந்து உட்கார்ந்து கொண்டு பாட்டை ஆநந்தத்துடன் கேட்டுக் கொண்டிருந்தான். பற்பல இராகங்களுடன் பாடுவதைக் கேட்டுப் பரவசமடைந்து வெளியிற் சென்று யார் இவ்விதம் பாடுகிறார்களென்று சுற்றி நாலாபக்கத்திலும் பார்த்தான். ஒரு சிறுவன் ஒரு மரக்கிளையின்மேல் உட்கார்ந்து கொண்டு புல்லாங்குழல் ஊதுவதைப் பார்த்தான். அப்பொழுது, நாய்கள், பூனைகள், மற்ற மிருகங்கள், பட்சிகள் எல்லாம் இச்சிறுவன் பாடுவதைக் கேட்க மரத்தினடியில் வந்து உட்கார்ந் திருப்பதையும் ராட்சதன்கண்டான். பட்சிகள் கவனமாய் இதைக் கேட்டுவந்ததாம்.

இராட்சதன் இச்சிறுபையன் இனிய குரலுடன் பாடும் பாட்டையும், புல்லாங்குழல் வாசிப்பதையும் கேட்டு ஆநந்தங்கொண்டு கூத்தாட ஆரம்பித்தான்.

இவனது மனைவியும் யார் பாடுகிறார்க ளென்பதை யறிய வெளியில் வந்து பார்க்கையில் தனது கணவன் கூத்தாடிக் கொண்டிருப்பதைக் கண்டு, மூடத்தன முள்ளவரே! ஏன் கூத்தாடுகிறீர் என்று கேட்டாள்.

"சிறிதுநேர மிங்கிருந்து இச் சிறுபிள்ளை பாடும் பாட்டையும், புல்லாங்குழலையும் கவனமாய்க்கேள், நிச்சயமாகவே உன்னை அறியாமல் பரவசமாய் நீயும் கூத்தாட ஆரம்பிப்பாய்" என்றான் ராட்சதன்.

அப்படியே அவன் மனைவி சிறிதுநேரம் கேட்டாள். தன்னை அறியாமல் தனது கையில் புடவையின் ஓரத்தைப் பிடித்துக்கொண்டு ஆநந்தக் கூத்தாட ஆரம்பித்து விட்டாள். கையில் அணிந் திருந்த காப்புகள் கிணீலென்று சப்தம் செய்து கொண்டும், கால் சதங்கைகள் கிணீ கிணிரென்று ஒலியை வீசிக் கொண்டு மிருந்தபொழுது இவள் ஒரு சிறு பெண் போல தென் பட்டாளாம்.

பேஷ்! பலே! !என்று சொல்லிக்கொண்டு இராக்ஷதன் கண் தலை தெரியாமல் கூத்தாடி ஆநந்தசாகரத்தில் மூழ்கி, ஏ! சிறு பிள்ளாய்! நான் நீ புல்லாங்குழலில் வாசிப்பதைக்கேட்டு அதிக சந்தோஷமடைந்தேன். உனக்கு என்னவேண்டுமோ அதைக்கேள். நான் உனக்கு அதைக் கொடுக்கிறேன்" என்றான்.

லிங்கோ தான் இங்கேவந்து இவ்விதம் இவர்களைச் சந்தோஷப்படும்படி செய்தான்.

உடனே லிங்கோ புன்சிரிப்புள்ள முகத்துடன் கீழே இறங்கிவந்து, "ஐயா, உம்து ஏழு குமாரத்திகளையும் எனக்குக் கொடும். எனக்கு நான்கு தமையன்மார்களுண்டு. ஒவ்வொரு தமையனுக்கும் இரண்டுபெண்களை விவாகம்செய்துவைக்கிறேன். எனது இளைய சகோதரனுக்கு கடைசிப்பெண்ணை விவாகம் செய்துவைத்தால்போதும். மேலும் வேண்டியபொழுது நெருப்பும் தயைசெய்து கொடுக்கவேண்டு" மென்றான்.

தனது குமாரத்திகளுக்கு கணவர்கள் கிடைக்கவில்லையே யென்று மனவருத்தமடைந்து கொண்டிருந்த இராக்ஷதனுக்குப்பாலில் பழம் நழுவி விழுந்தாற்போல் மிக்க சந்தோஷமுண்டானது. உடனே தனது குமாரத்திகளை வரவழைத்து எல்லாவற்றையும் விரிவாகச்சொன்னான். அவர்கள் மகிழ்ந்து, தங்கள் வீட்டிற்குள்வந்து விழுந்திருந்த அம்பை எடுத்து லிங்கோவினிடத்தில் அப்பெண்மணிகள் கொடுத்து, இது எங்களுக்கு நல்ல அதிர்ஷ்டத்தையளித்ததென்றார்கள்.

உடனே ராக்ஷதன் தன் புத்திரிகளுக்கு ஏராளமாக நகைகளையும் பட்டு பீதாம்பரங்களையும், பொன் வெள்ளி நாணயங்களையும் சீதனமாகக்கொடுத்து அவர்களை ஆசீர்வதித்து லிங்கோவுடன் மனமகிழ்ச்சியுடன் அனுப்பினான்.

இவர்கள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு தங்கள் தாய் தகப்பனரிடத்தில் விடைபெற்று லிங்கோவுடன் காட்டிற்குள் வெகுதூரம் சென்று கிட்சாதித்தா என்ற மரத்தண்டைபோனார்கள். இவனது நான்குசகோதரர்களும், இந்த ஏழு பெண்மணிகளைக் கண்டுகளித்தார்கள். உடனே முதலில் சொல்லியபிரகாரம் இவர்கள் இப்பெண்மணிகளை மணந்துகொண்டார்கள். லிங்கோ எனக்கு விவாகம் செய்துகொள்ள இஷ்டமில்லையென்றான்.

இவர்களெல்லாம் சுகித்து அங்கேயே வசித்துவந்தார்கள். லிங்கோ புத்திமானா யிருப்பதால் தங்களுக்கு அரசனாக யிருக்கும்படி கேட்டுக்கொள்ளவே, அவனும் சம்மதித்தான். தாங்களிருந்த இடத்தில் நாளடைவில் அநேக வீடுகளைக் கட்டிவந்தார்கள். ஜனங்கள் இவைகளில் வசித்துவரவும் ஏற்பாடு செய்யப்பட்டு வந்தது. இது காலக்கிரமத்தில் ஒரு பட்டணமானது. இதற்கு அரசன் லிங்கோதான். இவனுக்கு இப்பெண்மணிகள் தங்களிடத்திலிருக்கும் பொன், ரத்னகற்கள் முதலியவைகளை எடுத்து ஒரு கிரீடம்செய்து கொடுத்தார்கள். அது இவன் நெற்றியிலுள்ள நக்ஷத்திரத்தைவிட அதிகமாகப் பிரகாசிக்கவில்லை. ஆயினும் அதைத் தரித்துக்கொண்டு தனது பட்டணத்தைச் சரியாக ஆண்டுவந்தான். பக்கத்து தேசத்து இராஜன் லிங்கோவின் சாந்த குணங்களையும், சாமர்த்தியங்களையும் கண்டு வியப்புற்று தனது ஒரே பெண்மணியை இவனுக்கு மணம் புரிவித்தான். பின்பு லிங்கோ சௌக்யமாக எல்லாருடனும் ராஜ்யபாரம் பண்ணிக்கொண்டு வாழ்ந்துவந்தான்.

முற்றிற்று. ☞ C. S. R.

சுகாதாரக் கான்பெரென்ஸ்.

நம்தேசத்து சுகாதார நிலைமையில் அக்கரைப்பட்ட நிபுணர்கள் சிலர் பம்பாயில் போனவாரம் கான்பெரன்ஸ் கூட, அப்போது ஆனரபில் மிஸ்டர் பட்லர் வந்திருந்து, ஆரம்பப் பிரசங்கம் செய்தார். அதில் சுகாதார நிலைமையை எப்படி விர்த்திசெய்வதென்பதையும், என்னென்ன வியாதிகள் இந்தியரைப் பாதிக்கின்றன வென்பதையும், அவைகளைக் குறைக்க இந்தியாக்கவர்ன்மெண்ட் என்ன முயற்சிகள் செய்து வருகிறார்களென்பதையும், அவைகளை இனிக்கூடிய வரையில் எப்படித் தடுக்கலாமென்பதையும், மாகாணக் கவர்ன்மெண்ட்கள் இந்த வழியில் என்ன செய்து வருகிறார்களென்பதையும் பற்றிப் பேசினார். சுகாதார நிலைமையை விர்த்திபண்ணுவது ஜனங்களின் கூட்டுறவால் சாத்தியமாகையால், ஆரம்பத்தில் அவர்களுடைய பழக்க வழக்கங்களையும் பொருளாதார நிலைமையையும் சமூகவாழ்க்கையையும் அறிவது அவசியம். இந்தக் கான்பெரென்ஸில் கிராமங்களிலும் பட்டணங்களிலும் சுகாதார முறைகளையும் விசேஷ வியாதிகளைத் தடுப்பதையும் பற்றி கவனிக்கப்படும். இம்மாதிரிக் கான்பெரென்ஸ்கள் வருஷா வருஷம் சௌகரியமான இடத்தில் கூட்டப்படும்.

சுகாதார அபிவிருத்திக்குக் கல்வியே மூலகாரணம். கல்வியே மூலகாரணமானதால் சுகாதார அபிவிர்த்தி அதனபிவிர்த்தியைப் பற்றினதாயிருக்கும். ஆனாலும் இப்போதுள்ள நிலைமைகளைப்பற்றி நாம் தற்காலம் முயற்சிகள் செய்யவேண்டியது. பிளேக், காலரா, மலேரியா என்ற விஷஜுரம், விஷபேதி, இவைகளின் காரணங்களையும் தடுக்கும் விதங்களையும்பற்றிச் சோதனை செய்யவேண்டும். இவைகளுக்கு ஏற்கெனவே நிபுணர்கள் ஏற்பட்டிருக்கிறார்கள். பாக்டிரியாலஜி (பூச்சி சங்கார சாஸ்திரம்) யைப்பற்றி இந்தியாவிலுள்ள நிபுணர்களைப்போல வேறு எங்குமில்லை. க்ஷய ரோகம் (Tuberculosis) பம்பாய், கல்கத்தாபோன்ற பெரிய பட்டணங்களில் உண்டாயிருக்கின்றது. இந்த வியாதிக்குப் பாலும் வெண்ணெயும் காரணமானதால் இந்த வஸ்துக்களின் சோதனை இந்தக் கான்பெரென்ஸில் கவனிக்கப்படவேண்டும். சுகாதாரச் சோதனைகளுக்காக இந்தியாக் கவர்ன்மெண்ட் 5 லக்ஷ ரூபாய் ஒரு பண்டாக வைத்திருக்கிறார்கள். இந்த பண்டு ஜனங்களிற் செல்வவான்களால் அதிகப்படவேண்டும். இதையொட்டி நிபுணர்களடங்கிய சங்கம் ஒன்று ஏற்படும். போன வருஷம் இந்தியாக் கவர்ன்மெண்ட் மாகாணக் கவர்ன்மெண்டுகளுக்கு ஒத்தாசையாக ஒரு கோடி ரூபாய் கொடுத்தார்கள்.

இந்தியாவில் சுகாதாரத்தை முற்படுத்துவதில் ஜனங்களுடைய நிலைமையும் அறியாமையும் பெருந்தடையாயிருக்கும். ஆயினும், புத்திமான்கள் பலர் சுகாதாரத்தின் முக்கியத்தை யறிந்து அதில் அக்கரை பாராட்டி வருகிறார்கள். சாஸ்திரங்களின் வன்மையில் நம்பிக்கை வைத்து மனிதன் தன்னுடைய உயர்ந்த விருப்பங்களைப் பூர்த்தி செய்ய அவசியமான சுற்றுப்புற நிலைமைகளை உண்டுபண்ணும் நோக்கங்களுடன் நாம் முன்சென்று நம்முடைய வேலையின் பலனை நம்பின்னோராவது அனுபவிக்கும்படி செய்வோமாக.

☞ சுதேசமித்திரன்.

தர்பார் ப்ரோகராம்.

டிஸம்பர்மீ 7உ வியாழன்:—காலை 10-மணிக்கு ராஜாப்பிரவேசம். மாலை 3-மணிமுதல் 5-மணிவரையில் மன்னர்களை வரவேற்றல்.

வெள்ளி 8உ:—காலை 11-30-மணிமுதல் 1-30-மணிவரை மன்னர்களை வரவேற்றல். 3-40-மணிக்கு காலஞ்சென்றக் எட்வார்டு மன்னரின் ஞாபகார்த்தச்சடங்குகள். 8-மணிக்கு ராஜதம்பதிகளுக்கு விருந்து.

சனி 9உ:—தேசமன்னர்களை 11-30-மணிமுதல் 1 - 30-வரையிலும் வரவேற்றல் போலோ விளையாட்டும், புட்பாலும் மாலை 3-30-மணிக்கு நடந்தேறும்.

ஞாயிறு 10உ:—காலை 10-30 மணிக்கு மிலிடெரி காம்பில் சர்ச்சுசர்விஸ் நடந்தேறும்.

திங்கள் 11உ:—காலை 11 மணிக்கு போலோ கிரவுண்டில் பலநிறமுள்ள கொடிகள் கொடுக்கப்படும். போலா முடிவு ஆட்டம் 3-30 மணிக்குத்தொடங்கும்.

செவ்வாய் 12வ:—பகல் 12-மணிக்கு தர்பார் நடந்தேறும். ராஜ விருந்தும், வரவேற்றலும் இரவு 8 மணிக்கு நடந்தேறும்.

புதன் 13வ:—பகல் 10-45-மணிக்கு ராஜ சக்கரவர்த்தியவர்களின் காம்பில் (முகாமில்) வாலண்டியர் ஆபீஸர்களையும் இந்திய ஆபீஸர்களையும் வரவேற்றல், 3-30 மணிக்கு ராஜத்தோட்டக் கச்சேரியும், ஜனங்களுக்கு விருந்தும் நடந்தேறும், இரவு 8-மணிக்கு ராஜதம்பதிகளுக்குச் சாப்பாடு நடந்தேறும்.

வியாழன் 14வ:—பகல் 10-30 மணிக்கு ரெவ்யுவும், 3-30 மணிக்கு ஹாக்கி விளையாட்டும், இரவு 9-30 மணிக்கு பட்டமளிக்கும் காரியங்கள் நடந்தேறும்.

வெள்ளி 15வ:—பகல் 11 மணிக்கு போலோ கிரௌண்டில் போலீஸ் படைகளைப் பார்வையிடல், அன்று மாலை 3 மணிக்கு மிலிடெரி விளையாட்டுகள் பல நடந்தேறும், இரவு 9 மணிக்கு மல் யுத்தம் அல்லது குஸ்தி நடந்தேறும்.

சனி 16வ:—மாலை 1-மணிக்கு மகாராஜாவும் பரிவாரங்களும் புறப்படுதல்.

இங்கிலாந்திலிருந்து வந்து இறங்கினவர்கள்:—நவம்பர் மாதம் 10வ காலையில் இங்கிலாந்திலிருந்து பம்பாய் துறைமுகத்தில் சால்சட்டி மெயில் ஸ்டீமரிலிருந்து இறங்கினவர்கள் ஸர் F. டுமாயனும் அவர் மனைவியும், ஸர் B, புல்லரும் ரைட் ரெவரெண்டு நாகப்பூர் பிஷப்பும், கனம் மேஜர் கெல்லியும், கனம் M. R. க்ராஸ் வினரும், ஹிஸ் ஹைனஸ் பரோடா மாகாராஜாவும், இந்திர ராஜகுமாரத்தியும் இவர்கள் ஆவார்கள். ஹிஸ் ஹைனெஸ் செம்பத்ராவ் கைக்கோவாரும் தேக்சந்தும், பரோடா மகாராஜா ராஜகுமாரத்தி இவர்களை வரவேற்றுவதற்கு எதிர்கொண்டு சென்றார்கள். பரோடா மகாராஜாவும் ராஜகுமாரத்தியும் துறைமுகத்தில் இறங்கினவுடனே, ஸர் விட்டல் தாஸ் தாக்காஸேயும், ஸர் பாலச்சந்திர கிருஷ்ணுவும் பலரும் அவர்களுக்கு மாலையிட்டு வரவேற்றார்கள்.

துருக்கி ராஜாங்கத்துக்கு ஓர் பெரிய கப்பல்:—எடின்பரோ சர்வகலாசாலையில் பயிலும் மகம்மதியர்கள், இந்தியா, துருக்கி ஆப்பிரிக்கா, ஆப்கானிஸ்தானம் முதலிய தேசங்களிலுள்ள, மகம்மதியர்களின் பிரதிநிதிகளாக நின்று, துருக்கி ராஜாங்கத்தாருக்கு "டிரெட்நாட்" என்ற ஓர் பெரிய கப்பலைத் தயாரித்துக் கொடுப்பதற்காக, உலகத்திலுள்ள மகம்மதியர்கள் அனைவரும் பண உதவி செய்யவேண்டும் என்று கேட்டுகொண்டிருப்பதாகப் பெய்ஸா ஆக்பர் என்ற உருது பத்திரிகை கூறுகின்றது.

மாட்சிமைதங்கிய 5-வது ஜார்ஜ் மன்னருக்கு முடிசூட்டு நல்ல நாள்.

அத்தினா புரியாம் டில்லி
நகரத்தே யழகா யிப்போ
பத்தியார் மன்னர் தம்முட்
பாராளு மன்னர் மன்ன
ரொத்ததாஞ் சித்தஞ் செய்கை
யோங்கிடு மைந்தாம் ஜார்ஜுக்
கொத்ததோர் மகுடஞ் சூட்டு
மோர்தினம் நல்ல நாளே. (1)

நல்லநா ணிலத்து மாந்தர்
தமக்கெலாம் நன்மை யாக்க
வல்லராத் தந்தை தாயு
மற்றெதுந் தரணி யாள
வல்லவோர் மன்ன ரென்றே
மாமுனி பகர்ந்த வாக்கிற்
கெல்லையா மன்னர் ஜார்ஜு
மேற்குநாள் நல்ல நாளே. (2)

நல்லநாள் மற்றை நாள்கள்
நானில மாந்தார்க் கெல்லாஞ்
சொல்லுவா ரென்ப தாகுங்
கோள்களின் சூழ்ச்சி நாடி
எல்லைநா ளிசைப்பர் மற்று
மைந்ததாம் ஜார்ஜு மன்னர்
சொல்லுமோர் சுகத்தின் நாளா
மந்தநாள் நல்ல நாளே. (3)

கல்லிலே மணியு முண்டு
காட்டுளே தேனு முண்டு
சொல்லிலே பொருளு முண்டு
சொற்பொருள் தாழ்ப்ப துண்டு
புல்லுநாள் நேர்த லுண்டு
பூமிசை மாந்தர்க கெல்லாம்
நல்லபே ராசர்க் குண்டு
நற்குணம் நல்ல நாளே. (4)

தேசமொழி மன்னர் சொற்போற்
சிறக்கவே சேமஞ் செய்து
ஆசகலு மார்க்க முற்று
மகற்றவே யைந்தாம் ஜார்ஜும்
மோசமலி வழக்கைச் சான்றை
முடுக்கவே முடியுஞ் சூட்ட
வாசமலர் மாது மேரி
வந்தநாள் நல்ல நாளே. (5)

இந்துவா நேசன் கையி
லீய்ந்தனன் டில்லிக் கேகப்
பிந்தியோர் பாவின் மாலை
பிரியமாக் கட்டி யீவேன்
இந்தநாள் நூற்கம் பாக்க
மேற்றதோர் சென்னை வாசம்
அந்தமாந் தமிழு மாய்ந்த
வேங்கட ராமன் வாக்கே. (6)

9-12-11.

☞ தி. வேங்கடராம ஐய்யங்கார்,
தமிழ்ப்பண்டிதர்.

சமாசாரக் குறிப்பு.

லண்டன் கார்பொரேஷன் கில்ட்ஹால் மண்டபத்தில், போஸ்டாபீஸ் ஸேவிங்ஸ் பாங்கு ஜுபிலி கொண்டாட்டத்தை நடத்தினார்கள். சுமார் இரண்டாயிரம் பெயர் விருந்துண்டு சம்பாஷித்தார்கள். ஜார்ஜ் அரசர் ஓர் நீண்ட கடிதம் எழுதி, அதில் ஜனங்களுக்கு இந்த (பாங்கி) அதிக ஒத்தாசை செய்து வருகிறதென்றும், அது ஸ்திரமாய் விசாலித்து வருவது தமக்குச் சந்தோஷமென்றும் தெரிவித்தார். மிஸ்டர் லாய்ட் ஜார்ஜ் போஸ்டாபீஸ் சேவிங்ஸ் பாங்கியில் போட்டிருக்கும் பணம் 1700 லக்ஷம் பவுன் என்று ஓர் கடிதம் எழுதினார்.

லண்டன், நவம்பர்மீ 6வ நமது ஜார்ஜ் சக்கரவர்த்தியவர்கள் இந்தியா விஜயத்திற்கு முடிவான ஏற்பாடு பண்ண இன்று லண்டன் வந்துவிட்டார்.

லண்டன் நவம்பர்மீ 6வ ஸ்பெயின் போர்ட்டு:—இதற் கருகிலுள்ள பாம்பு வாய்க்கால் வாயில் திடீரென்று ஒரு தீவு வெளியில் தென்பட்டது. இது தெளிப்படு முன்னுல் சமுத்திரத்தில் ஒரு பெரும் கொந்தளிப்பு உண்டாய் அதனேடு நீரின் கீழிருந்து, புகைப்படலமும், அக்கினி ஜ்வாலையும் கிளம்பிற்றும்.

லண்டனில் நடந்த முடிசூட்டின்போது ஏகாதிபத்திய நாட்டிலுள்ள மேரி என்ற நாமமுடையவர்களெல்லாரும் நமது சக்கரவர்த்தினிக்கு நன்கொடை சமர்ப்பித்தாரென்று நாம் முன்னம் பிரஸ்தாபித்திருக்கிறேம். இப்பொழுது சக்கரவர்த்தினியார் அக்கொடையை லண்டனில் வேலைசெய்யும் கூலிப்பெண்களுக்கு வில்ஸ்டபிலில் ஒரு விடுமுறை விடுதி கட்டுவதில் உபயோகப்படுத்துவதாய்த் தீர்மானித்துவிட்டார்.

லண்டன், நவம்பர்மீ 7வ மால்டாவில் நமது ஜார்ஜ சக்கரவர்த்தி இறங்குவதாய் முன்பு ஏற்பாடா யிருந்தது. இப்பொழுது அத்தீவில் காலரா உபத்திரவம் தோன்றி யிருப்பதால், சக்கரவர்த்தி தம்பதிகள் அத்தீவில் இறங்கவில்லை.

சக்கரவர்த்தியவர்கள் இந்தியாவி லிருக்கும்போது அவரது நிர்வாகப் பொறுப்பு கவுன்ஸிலின் ஒரு ஆர்டர்மீது சுமத்தப்படும். அக்கவுன்ஸிலின் உத்தரவுகள் அரச உத்தரவாகக் கருதப்படும். முக்கியமான எல்லா விஷயங்களிலும் சக்கரவர்த்திக்கும் அவர் மந்திரிமார்களுக்கும் தந்திப் போக்குவரத்து தினமும் நடந்துவரும். மேற்குறிப்பிட்ட ஆர்டரில் மெம்பராவோர் கானுட்டுக்கோமகன், பிரின்ஸ் ஆர்தரும், காண்டர்பரி பிரதமகுருவும், லார்டு லோர்பர்னும், லார்டு மார்லியுமாவார்கள். இப்படி மிஸ்டர் ஆஸ்க்வித்து பேசினுர்.

சக்கரவர்த்தி தம்பதிகளை ஏற்றிவரும் மெடினு 7-ம்தேதி காலை ஏடனுக்கு வந்து சேரும், ஜார்ஜ் சக்கரவர்த்தி அன்று மாலை இறங்கி, அவ்வூரார் படிக்கும் உபசாரப்பத்திரத்தை அங்கீகரிப்பார். திரும்புகாலில் மால்டாவிலும் ஜிப்ரால்டரிலும் இறங்குவார்கள்.

லண்டன், நவம்பர்மீ 9வ சக்கரவர்த்தி தம்பதிகள் இந்தியாவுக்கு இங்கிலாந்து ராஜ நகைகளைக் கொண்டுவர மாட்டார்கள்.

ராஜதம்பதிகள் பம்பாயில்வந்து இறங்கும்பொழுது அடியிற் குறிப்பிட்ட அட்டவணை அனுசரிக்கப்படும்.

டிசம்பர்மீ 2வயன்று மாலை 4-மணிக்கு அப்பல்லோ பந்தரில் ராஜதம்பதிகளை வரவேற்றல், பிறகு ராஜதம்பதிகள் பம்பாய் பட்டணத்தின் ஓர் பகுதியை வண்டியில் ஏறிக்கொண்டவாக்கில் சுற்றிப் பார்த்துவிட்டு, கப்பலுக்குத் திரும்புதல், இரவு 10 மணிக்கு தீபவேடிக்கை பாணவேடிக்கைகள் பாக்பேயில் நடந்தேறும்.

டிசம்பர்மீ 3உ கவர்ன்மெண்டு ஹவுஸில் சிற்றுண்டி, பிறகு ராஜதம்பதிகள் கோவிலில் நடக்கும் பூஜைக்கு விஜயஞ் செய்தல்.

டிசம்பர்மீ 4உ ராஜதம்பதிகள் அன்று பகல் 9-30 மணிக்கு கரையில் இறங்கி பழைய பம்பாய்க் காட்சிச்சபை ஸ்டேடியம் என்ற இடத்தில் குழந்தைகளுக்கு விருந்து கொடுக்கப்படும்வரை பார்வையிட்டு, கண்காட்சிச் சபைக்குச் செல்வது, அங்கு பகலில் வாணவேடிக்கைகள் நடந்தேறும்.

டிசம்பர் மாதம் 5-ந்தேதி:—அன்று மாலை எலிபெண்டா குகைக்குச் செல்லுதல், அன்று பகல் போஜனம் முடிந்த பிறகு ராஜதம்பதிகள் டெல்லிக்குப் பிரயாணம், பம்பாயில் ராஜதம்பதிகளின் விஜயம் பண்டுக்கென்று நாளது வரையிலும் கையொப்பமான தொகை ரூபாய் 2,97,745 என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது.

கல்கத்தா ரெட்ரோட்டில் 20,000 பாடசாலைச் சிறுவர்களை ராஜதம்பதிகளின் பார்வைக்குத்தெரியும்படியாய் நிறுத்திவைத்து உபசரிப்பதுதான், கல்கத்தாவில் ராஜதம்பதிகளை வரவேற்பதற்காகச் செய்யப்பட்டிருக்கும் பலபாகங்களில் ஒன்றாகும்.

1911 வருஷம் அக்டோபர் மாதம் 19-ந்தேதி இவ்வூர் டவுன் ஹாலில் தர்பங்கா மகாராஜாவின் அக்கிராசனத்தில் கூடிய ஓர் பெரும் ஹிந்து வைதிகர்களின் மகுடாபிஷேகக் கொண்டாட்டத்தின் ஞாபகார்த்தமாகக் கடவுளை ஜெபித்தல் முதலிய பல வைதிகச்சடங்குகளும் நடந்தேறும்.

ராஜசக்கரவர்த்தியவர்கள் இந்தியாவிற்கு விஜயம் செய்யும்பொழுது சரித்திர மெழுதுவோரையும், சித்திர மெழுதுவோரையும் தம்முடன் அழைத்துக்கொண்டு வருவார். சரித்திர மெழுதுவோரான கனம் J. M. பார்டெஸ்க்யூ 1906வ௵ முதல் விண்ட்ஸர் அரண்மனையில் லைப்ரேரியனாக இருந்து வருகிறார். இவர் ராணுவ சம்பந்தமான சரித்திரத்தை எழுதிப் பிரசுரஞ் செய்திருக்கின்றனர். தவிர, பிரிட்டிஷ் ராணுவ சரித்திரம் என்கிற ஓர் விஸ்தாரமான கிரந்தத்தை எழுதியிருக்கின்றனர். இவர் எர்ல் ஆப் பார்டெஸ்க்யூவின் சகோதரர்களுள் ஒருவராவார். சித்திர மெழுதுவோரான மிஸ்டர் G. P. ஜாகோம்ப் ஹூட் படங்களுக்கு வர்ணங் கொடுப்பதிலும் சித்திரப்படம் எழுதுவதிலும் கறுப்பு வெண்மை முதலிய வர்ணங்களைத் தெளிவாக எடுத்துக் காண்பிப்பதிலும், பொன்முதலிய உலோகங்களில் சித்திரம் எழுதுவதிலும் கைதேர்ந்தவர். இவரை லார்டு கர்ஸன் டெல்லி தர்பார் காலத்திலும் வேல்ஸ் இளவரசரின் இந்தியச் சுற்றுப் பிரயாணத்தின்போதும் ஆக இருமுறை இந்தியாவுக்குப் போய்வரும்படியாக கிராபிக் பத்திராபர் அனுப்பியிருந்தனர். இரண்டாவது சந்தர்ப்பத்தில்தான் இவர் ராஜாவின் பிரியத்தைச் சம்பாதித்தனர்.

இந்தியாவிலுள்ள பண்டிதர்கள் அனைவரும்சேர்ந்து, சக்கரவர்த்திக்கு, அவர் டெல்லிக்கு வரும்பொழுது, சித்திர எழுத்தில் எழுதப்பட்ட ஓர் அட்ரெஸ், வாசிப்பதாக யோசனைசெய்து வருகிறார்கள். அந்த அட்ரெஸ் ஸமஸ்கிருத கவியில் இருக்கும். இதன் காப்பி ஒன்று சக்கரவர்த்தியின் பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. சக்கரவர்த்தியினுடைய அனுமதி இந்த

வாரத்தில் கிடைக்குமென்று எதிர்பார்க்கப் படுகிறது. இந்த அட்ரெஸ், சக்கரவர்த்தி கல்கத்தாவுக்கு வரும்பொழுது கொடுக்கப்படும் ஆகையால், பண்டிதர்கள் சேர்ந்து, ஸமஸ்கிருத கவியில் கீழ்தேச ஆசார அனுஷ்டானங்களுடன், கொடுக்கப்படும். இந்தப்பத்திரம், மெஜெஸ்டிஸ் சக்கரவர்த்திக்கும் சககரவர்த்தினிக்கும், ஓர் ஆச்சரியத்தை யுண்டுபண்ணும். இது இந்தியாவின் பல பாகங்களில், காஷ்மீர் உள்பட, பண்டிதர் அனைவர் பேராலும் வாசிக்கப்படும். அட்ரெஸ் வாசிக்கப்படும் சமயத்தில் சங்கத்தொனி முழக்கத்தோடு மற்ற ஆரவாரங்களும் நடக்கும். மகாராஜாவுக்கு தீர்க்காயுஸு உண்டாகவேண்டுமென்று பிரார்த்தனைசெய்த பிறகு, இந்த அட்ரெஸ் வேதஸ்வரங்களுடன் படிக்கப்படும். ஸ்ரீ சங்கராசாரியார் முதலிய மடாதிபதிகளும் தென்னிந்தியா பண்டிதர்களும் இதில் சேருவார்கள்.

மைசூர் பட்டணத்தில் மிஸ்டர் M. ஸ்ரீனிவாசராவ் செவிடு, ஊமை, குருடு, இவர்களுக்காக ஸ்தாபித்த ஸ்கூல் நல்லவேலை செய்துவருகின்றது; சமஸ்தானத்தில் இவ்வித அங்க ஹீனமுள்ள பிள்ளைகள் ஆயிரமிருக்கும். 28 பிள்ளைகள் தான் படிப்பிக்கப்பட்டு வருகிறார்கள். இவர்களுக்கு விளக்கு நாடாக்கள் செய்வதும், பிரம்புவேலைகளும், சங்கீதமும் சொல்லிக்கொடுக்கப்பட்டுவருகின்றன. இந்த ஸ்கூலில் 10-வது அப்தபூர்த்தி கொண்டாட்டத்தில் தலைமைவகித்த மிஸ்டர் விஸ்வேஸ்வரய்யர், தையல்வேலை, அச்சுக்கோர்த்தல், இரத்தன கம்பளம்நெய்தல், சித்திரம்வரைதல் இவைகளும் சொல்லி கொடுக்கப்படலாம் என்றுசொன்னார். இந்த ஸ்கூல் உபாத்தியாயர்கள் தங்கள் வேலையில் ஊக்கமுள்ளவர்களாய் இருக்கிறார்கள். மகாராஜா அவர்களும் திவான்களும், மற்றப்பொது ஜனங்களும், இதை ஆதரித்துவருகிறார்கள் என்றறிய சந்தோஷப்படுகிறோம். இதில்தேர்ந்த பிள்ளைகள் பலவிடங்களில் நாணயமாக வேலைசெய்து ஜீவித்துவருகிறார்கள். சிலர் சங்கீதவித்தையில் அதிக திறமைகாட்டிவருகிறார்கள்.

லண்டன், அக்டோபர் 23உ ஸக்னீவர் டிங்கென் என்றவிடத்தில் டாக் என்ற ஒரு ஆகாயவிமானி ஆகாயத்தினின்றும் விழுந்து இறந்துபோனார். இவர் மரணத்தோடு, 1908ஹூ முதல் இதுவரையில் சம்பவித்த ஆகாயவிமானிகளின் மரணம் 100 ஆகிறது.

லண்டன் அக்டோபர்மீ 25உ "ஹிந்துஸ்தான்" என்கிற கப்பலில் "காம்ரேடாய் வேலையில் பழகிவந்த பிரின்ஸ்ஆப்வேல்ஸ் அவ்வேலையைவிட்டு நீங்குகிறார். லண்டன் அக்டோபர்மீ 26உ இவர் இப்பொழுது யூனிவர்ஸிடிக்குப்போகப்போகிறார். "ஹிந்துஸ்தான்" கப்பலின் காப்டன் இவரது ஊக்கத்தையும் புத்திக் கூர்மையையும் புகழ்ந்து, இவரையொத்த ஒருநல்ல "காம்ரேடை" இனிப்பெறுவது துர்லபமென்று இவர்பிரிவினால் துக்கம்காட்டினார்.

லண்டன், அக்டோபர்மீ 25உ மெடினுகப்பல் சக்கரவர்த்தியை ஏற்று இந்தியாவுக்குப் புறப்படச் சித்தமாயிருக்கிறது. அது முழுதும் வெண்மையான வர்ணம் கொடுக்கப்பட் டிருக்கிறது. உட்புற அலங்காரமும் வெண்மை தான். சக்ரவர்த்திக்கும் சக்ரவர்த்தினிக்கும் 4, 4, அறைகள பிரத்தியேகமாக அமைக்கப்பட் டிருக்கின்றன.

சக்ரவர்த்தி தம்பதிகளின் பரிவாரம் 80-பேராகுமாம். ஒரு கப்பலறையில் ஒரு பெரிய இரும்புப் பெட்டி வைக்கப்பட்டிருக்கிறது. அது ராஜாங்க நகைகள் வைப்பதற்காம்.

ஆனரபில் வெனிஷ்யா பேரிங், லேடி ஆம்திலுக்குப் பதிலாய் சக்ரவர்த்தினிக்குப் பணிப்பெண்ணாய் வருவார். லேடி. ஆம்திலின் கணவரது கண்ணில் ஒரு குளவி கொட்டிவிட்டதால், அவர் தேக அசௌக்கியமாயிருக்கிறார். அதனால் லேடி ஆம்தில் இந்தியாவுக்கு நமது சக்ரவர்த்தினியைத் தொடர்ந்துவரக் கூடவில்லை.

லண்டன், அக்டோபர்மீ 27வ மேரியவர்கள் இந்தியாவின் சீதோஷணத்திற்குத் தக்கபடி முடிசூட்டு உடையைச் சிறிது இலேசாக உடுப்பார்.
இவரது நகைகளுள் வைரக்கற்பதித்த ஒரு தாமரைமலரும் மிகச் சிறந்த முத்தாஹாரமும் விசேஷமாகக் காணப்படும்.

ஹர்மெஜஸ்டி க்வீண்மேரி, உடுப்பு விஷயமாய் வருஷம் ஒன்றுக்கு 2.000 பவுனும், க்வீன் அலெக்ஸாண்டரா வருஷம் ஒன்றுக்கு 2,000 பவுனுக்குக் குறையாமலும், உலாந்து தேசத்து மகாராணி வருஷம் ஒன்றுக்கு 4,000 பவுனும், சாதாரண சந்தர்ப்பங்களில் ஆடம்பரமில்லாத உடைகளை தரித்துவரும் ருஷியா தேசத்து ஜாரீனா,ஐரோப்பாவில் உடுப்பு விஷயமாய்ச் செலவழித்து வருபவர்களைவிட அதிகத் தொகையைச் செலவழித்து வருகிறதாகவும், ஜெர்மன் சக்கரவர்த்தினி உடுப்பு விஷயமாய் வருஷம் ஒன்றுக்கு சற்றேறக்குறைய 2,500 பவுனும், இத்தாலிய ராணி வருஷம் ஒன்றுக்கு 3000 பவுனும் செலவழித்து வருகிறதாக அறிகிறோம்.

டெல்லி தர்பார்! டெல்லி தர்பார்!!

இனி ஒவ்வொருமாதப் பத்திரிகையிலும் சித்திரப்படங்கள் வெளிவரும். டிசம்பர்மாதப் பத்திரிகையில் டெல்லி தர்பார் முழு விவரமும், அதன்சம்பந்தமாக **6**-சித்திரப்படங்களும், **10**-சித்திரப் படங்களடங்கிய ஒரு கதையும் வெளிவரும். இப்பத்திரிகையின் விலை அணா **4** தான். வேண்டுவோர் இப்பொழுதே ரிஜிஸ்டர் செய்துகொள்ளவேண்டும். இது டிசம்பர்மீ **29**வ யன்று வெளிவரும்.

முக்கிய விளம்பரம்.

இவ்வருஷ சந்தாத்தொகை கொடுக்காதவர்களுக்கு டிசம்பர்மீ பத்திரிகை வி-பி-யில் அனுப்பப்படும். சந்தாதாரர்கள் தயவுசெய்து வழக்கம்போல் பத்திரிகையைப் பெற்றுக்கொண்டு பணம் அனுப்பி உதவிபுரிவார்களென்று நம்புகிறோம்.

☞ சி.எஸ். இராமசாமி ஐயர்,
மாதர் மனோரஞ்சினி பத்திராதிபர்.

மாதர் மனோரஞ்சினி அனுபந்தம்

நமது 5-வது ஜார்ஜ் அரச சக்ரவர்த்தி. மேரி சக்ரவர்த்தினி.

MADRAS : THE GUARDIAN PEESS MOUNT ROAD